2023 மார்ச் 29] [திரு. எடப்பாடி K. பழனிசாமி]

ஒழுங்கு எவ்வளவு மோசமான நிலையில் உள்ளது என்பதை வெட்டவெளிச்சமாகக் காட்டுகிறது. இதனை நான் மிகுந்த மனவேதனையுடன் இந்த அவையில் பதிய வைக்க விரும்புகிறேன். தமிழகக் காவல் துறைத் தலைவர் DGP *அவர்கள், தமிழகத்தில் கஞ்சா விற்பனையை முற்றிலும் ஒழிக்க* Operation Ganja Vettai *2.0 என்ற திட்டத்தை அறிவித்தார். ஆனால், இது முழுமையாகச் செய்யப்படாத காரணத்தினால், இப்படிப்பட்ட நெஞ்சைப் பதற வைக்கும் நிகழ்வுகள் நடைபெறுகின்றன. இனியாவது, அரசு இத்தகைய குற்றவாளிகள்மீது இரும்புக்கரம் கொண்டு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று வலியுறுத்துகின்றேன். போதைப் பொருட்களின் பிடியிலிருந்து மாணவர்கள் மற்றும் இளைஞர்கள் சமுதாயம் விடுபட வேண்டுமென்றும், கஞ்சா வியாபாரிகள் பற்றி தகவல் கூறுபவர்களின் பாதுகாப்பை அரசு உறுதி செய்ய வேண்டுமென்றும், அரசினுடைய கவனத்திற்குக் கொண்டுவருகின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இதுசம்பந்தமாக (குறுக்கீடு) உட்காருங்கள் சொல்கிறேன். (குறுக்கீடு) உட்காருங்கள், நான் சொல்கிறேன். (குறுக்கீடு) எல்லோரும் உட்காருங்கள். இதுசம்பந்தமாக, பாட்டாளி மக்கள் கட்சியைச் சேர்ந்த திரு. ஜி.கே. மணி அவர்கள், திரு. இரா. அருள் அவர்கள், திரு. ச. சிவகுமார் அவர்கள் ஆகியோரும் கவன ஈர்ப்பு அறிவிப்புக் கொடுத்திருக்கிறார்கள்.*

3. சிறப்புக் கவன ஈர்ப்பு

திருநெல்வேலி, அம்பாசமுத்திரம் உதவி காவல் கண்காணிப்பாளர் நடவடிக்கைகள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மேலும், திருநெல்வேலி மாவட்டம், அம்பாசமுத்திரம், உதவி காவல் கண்காணிப்பாளர் நடவடிக்கைகள்மீது திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக மாண்புமிகு உறுப்பினர் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா அவர்கள், திரு. தி. வேல்முருகன் அவர்கள், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக முனைவர் இசக்கி சுப்பையா அவர்கள், திரு. எஸ்.பி. வேலுமணி அவர்கள், திரு. செ. கிருஷ்ணமுரளி அவர்கள், திரு. ஆர்.பி. உதயகுமார் அவர்கள், திரு.* V.P. *கந்தசாமி அவர்கள், திரு.* K.C. *கருப்பணன்*

அவர்கள், திரு. சு. ரவி அவர்கள், இந்திய தேசிய காங்கிரஸ் கட்சி சார்பாக, திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள், திரு. கு. செல்வபெருந்தகை அவர்கள், பாட்டாளி மக்கள் கட்சி சார்பாக, திரு. இரா. அருள் அவர்கள், திரு. ஜி.கே. மணி அவர்கள், விடுதலை சிறுத்தைகள் கட்சி சார்பாக, திரு. சிந்தனை செல்வன் அவர்கள், திரு. ஜெ. முகம்மது ஷாநவாஸ் அவர்கள், இந்திய கம்யூனிஸ்ட் (மார்க்சிஸ்ட்) சார்பாக திரு. வி.பி. நாகைமாலி அவர்கள், திரு. மா. சின்னதுரை ஆகியோர் விதி 55-ன்கீழ் கவன ஈர்ப்பு அறிவிப்பாகக் கொடுத்துள்ளார்கள். இதனைச் சிறப்புக் கவன ஈர்ப்பு என்ற முறையில் எடுத்துக்கொள்கிறேன். இதுகுறித்து, கட்சிக்கு ஒருவர் என்ற முறையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குச் சுருக்கமாகக் கொண்டுவரலாம். இன்று காலை 2-00 மணி வரைதான் சட்டமன்றம் நடைபெறும். அதன்பின், மாலை 4-00 மணிக்குதான் கூடும். 9 உறுப்பினர்கள் பேச வேண்டும். 2 அமைச்சர்கள் தங்களுடைய மானியக் கோரிக்கைகளைத் தாக்கல் செய்து, பதில் சொல்ல வேண்டும். ஆகவே, பேச வருகின்றவர்கள் மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய கவனத்தை ஈர்த்து, அமரும்படி அன்போடு கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் முனைவர் இசக்கி சுப்பையா அவர்கள்.

முனைவர் இசக்கி சுப்பையா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருநெல்வேலி மாவட்டம், அம்பாசமுத்திரம் உதவி காவல் கண்காணிப்பாளர், திரு. பல்வீர் சிங் அவர்கள், சிறு குற்றங்கள் செய்ததற்காக, விசாரணைக்காகக் குற்றவாளிகளை அழைத்து வந்து, விசாரணை செய்யாமல், அவர்களின் பற்களைப் பிடுங்கியதாக எழுந்த குற்றச்சாட்டின் அடிப்படையில், நான் உடனடியாக திருநெல்வேலி மாவட்டக் காவல் துறை கண்காணிப்பாளர் அவர்களைத் தொடர்புகொண்டபோது, அவர்களும் சம்பந்தப்பட்ட அதிகாரியின்மீது உள்ள குற்றங்களை, உயர் காவல் துறை அதிகாரிகளிடம் எடுத்துக்கூறி, அதற்காக அந்த உதவி காவல் கண்காணிப்பாளர்மீது நடவடிக்கை எடுக்க ஆவன செய்வதாகக் கூறினார்கள். அந்த அடிப்படையில் அம்பாசமுத்திரம் உதவி காவல் கண்காணிப்பாளர் பல்வீர் சிங் அவர்களைக் காத்திருப்போர் பட்டியலில் வைத்துவிட்டார்கள். மாவட்டத் துணை ஆட்சியர்மூலம் விசாரணைக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

2023 மார்ச் 29] [*முனைவர் இசக்கி சுப்பையா*]

முற்பகல் 11–15

அதேசமயம் அந்த உதவி காவல் கண்காணிப்பாளர், அவர்களின் பதவியையும், பொறுப்பையும் மறந்து எந்த விசாரணையும் இன்றி, இருபதுக்கும் மேற்பட்ட இளைஞர்களின் பற்களைப் பிடுங்கி, அதிலும் முக்கியமாக திருமணமாகாமல் அதிக இளைஞர்கள் உள்ளார்கள். அவர்களின் வாழ்க்கை இப்போது கேள்விக் குறியாக உள்ளது. மாவட்டத் துணை ஆட்சியர் அவர்கள் இந்த விசாரணையைத் தீவிரப்படுத்த ஆவன செய்ய வேண்டும். அதேசமயம், அந்த அதிகாரியைக் கைது செய்து . . . (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், மாண்புமிகு முதல்வர் அவர்களின் கவனத்தை ஈர்த்து அமருங்கள்.*

முனைவர் இசக்கி சுப்பையா: *அதேசமயம், அந்த அதிகாரியைக் கைது செய்து, அவருக்கு சட்டத்தின்படி தண்டனை வழங்க வேண்டும். "பல் போனால் சொல் போச்சு" என்று ஒரு பழமொழியே உள்ளது. எனவே, பாதிக்கப்பட்ட அந்த இளைஞர்களுக்கு நிவாரணம் வழங்க வேண்டும். உரிய காலத்தில் பாதிக்கப்பட்டவர்களின் மனநிலை பாதிக்காத அளவிற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் போதும். மாண்புமிகு உறுப்பினர் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா அவர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வந்துவிட்டீர்கள். (குறுக்கீடு) இல்லை. ஆரம்பிக்கவில்லை, முடிக்கவில்லையென்பது இல்லை. நீங்கள், அரசின் கவனத்தை ஈர்த்துவிட்டீர்கள். விஷயம் முடிந்துவிட்டது; இதுபோதும். மாண்புமிகு உறுப்பினர் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா அவர்கள்.*

முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழ்நாட்டு முதலமைச்சர் அவர்கள் காவல் துறையை நவீனப்படுத்துவதற்கும், சீரமைப்பதற்கும் பல்வேறு நடவடிக்கைகளைச் சிறப்பாக எடுத்து வரக்கூடிய சூழலில், நெல்லை மாவட்டம், சேரன்மாதேவி, உதவி காவல் கண்காணிப்பாளர் பல்வீர் சிங்கினுடைய நடவடிக்கை மிகப் பெரிய அதிர்ச்சியை அளிக்கின்றது. சாதாரண குற்றங்களுக்காக விசாரணைக்கு அழைத்து வரப்பட்ட இளைஞர்களுடைய வாயில்*

முக்கால் inch, 1½ inch ஜல்லிகளை போட்டு, அவர்களுடைய பல்லை உடைப்பது, உயிர் நாடியை கெடுப்பது போன்ற செயலில் ஈடுபட்டிருக்கின்றார். அவர் புதிதாக I.P.S. அதிகாரியாகப் பதவியேற்று, இப்போதுதான் முதல் பொறுப்பு வகிக்கிறார். இந்த நிலையிலேயே இப்படி ஓர் அப்பட்டமான, மனித உரிமை மீறலில் ஈடுபடும்போது, 30 ஆண்டுக்காலம் சேவையில் அவர் என்ன மனநிலையில் இருப்பார் என்பது ஒரு மிக முக்கியமான கேள்வியாக இருக்கின்றது. (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் போதும். மாண்புமிகு முதல்வர் அவர்களின் கவனத்தை ஈர்த்து அமருங்கள்.

முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா: ஒரு நிமிடத்தில் முடித்துவிடுகிறேன். இதே அவையில் சென்னையில் விக்னேஷ் என்கிற ஓர் இளைஞர் உயிரிழந்தது தொடர்பாக ஒரு கவன ஈர்ப்பு அறிவிப்பு கொண்டு வந்தபோது, இரவு நேரத்தில் தேவையில்லாமல் விசாரணைக்கு மக்களை அழைக்கக் கூடாது என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உத்தரவு போட்டுள்ளார்கள். அதையும் அவர் மீறியிருக்கின்றார். எனவே, இவர்மீது criminal குற்றம் பதிவு செய்யப்பட வேண்டும். இப்போது அவரை காத்திருப்போர் பட்டியலில் உடனடியாக மாற்றியிருப்பது சிறப்பான நடவடிக்கை. அதற்குமேல் இவர்மீது criminal குற்றம் பதிவு செய்யப்பட்டு, தகுந்த நடவடிக்கை எடுத்து, பதவி நீக்கம் செய்வதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்தை ஈர்த்து அமைகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள்.

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டம்-ஒழுங்கு சிறப்பாக நடத்துகின்ற அரசு என்று போற்றக்கூடிய இந்தச் சூழ்நிலையில் அம்பாசமுத்திரம் A.S.P. சட்டத்தைத் தன் கையில் எடுத்து, காட்டுமிராண்டித்தனமாக இளைஞர்களை அடித்து, உதைத்து, வித்தியாசமான முறையில் ஜல்லி கற்களை வாயில் போட வைத்து, அவர் முன்னாலே கடிக்க வைப்பது, கல்லால் இடிப்பது, பற்களை உடைப்பது என்பது ஏற்றுக்கொள்ள இயலாத ஒரு விஷயம். மிக மோசமான, கொடூரமான செயலைச் செய்திருக்கிறார். I.P.S. officer ஆக training பெற்று வந்து இந்தப் பணியை செய்கிற இந்த ஆரம்பக் காலத்திலேயே,

2023 மார்ச் 29] [*திரு. ஜே.ஜி. பிரின்ஸ்*]

இப்படிப்பட்ட கொடுமையான தவறுகளைச் செய்யும்போது தொடர்ந்து அவரை எப்படிப் பணியில் வைக்க முடியும்? அரசு தக்க நடவடிக்கை எடுத்திருக்கிறது. காத்திருப்போர் பட்டியலில் வைத்திருக்கிறது. அது மட்டும் போதாது. He will be removed from the service *என்ற வகையில் நடவடிக்கை எடுக்க வேண்டும். அவ்வாறு நடவடிக்கை எடுப்பது என்பது மற்ற காவலர்களுக்கும், காவல் துறைக்கும் ஓர் எடுத்துக்காட்டாக இருக்க வேண்டும். கண்ணியமிக்க காவல் துறையில் தங்களுடைய பணிகளைச் சிறப்பாக செய்து, அரசிற்கு பெருமை சேர்க்கக்கூடிய அதிகாரிகள் இப்படிப்பட்ட தவறுகளைச் செய்கிறபோது, தண்டிக்கப்பட வேண்டுமென்பதுதான் என்னுடைய கருத்து. ஆகவே, அதற்குரிய நடவடிக்கைகளை எடுப்பீர்கள் என்ற நம்பிக்கையில் அரசின் கவனத்தை ஈர்த்து அமர்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. அருள் அவர்கள்.*

***திரு. இரா. அருள்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தென்காசி மாவட்டம், அம்பாசமுத்திரம் காவல் நிலையத்திற்குட்பட்ட பகுதியில்* A.S.P. *பல்வீர் சிங், விசாரணைக்கு அழைத்து வருபவர்களின் பற்களை உடைப்பது என்பதைத் தன்னுடைய வாடிக்கையாக வைத்துக்கொண்டிருக்கிறார். அவர் ஒரு மன நோயாளிபோல் செயல்பட்டுக் கொண்டிருக்கிறார். இப்போதுதான் பணிக்கு வந்த ஒரு* I.P.S. *அதிகாரி. இதுபோன்று செயல்பட்டால், இன்னும் 30 ஆண்டுக்கால பணியில் அவர் இன்னும் எவ்வளவு கொடுஞ்செயல்களை செய்வாரோ என்ற அச்சம் உள்ளது. மனித உரிமை ஆணையம் அவர்மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறது. இதுகுறித்து விரிவான விசாரணை செய்து, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தகுந்த நடவடிக்கை எடுத்து, அவர் பணிக்கே வராதவாறு, காவல் துறைக்கே ஒரு முன்னுதாரணமாக நடவடிக்கை எடுக்க வேண்டும். (குறுக்கீடு) ஒரு நிமிடத்தில் முடித்துவிடுகிறேன். இனிமேல் காவல் துறையில் அவர் பணியாற்றக் கூடாது. அவரைக் கைது செய்ய வேண்டும், அதேபோன்று, வியாசர்பாடி அ.தி.மு.க. தெற்குப் பகுதி கழகச் செயலாளர் திரு. இளங்கோவன் அவர்களுடைய கொலைக்கும் விரிவான விசாரணை செய்து அதற்குரிய தண்டனை வழங்க வேண்டும். இதுபோன்ற சம்பவங்கள் தமிழ்நாட்டில் எங்கும் நடக்கக் கூடாது என்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் கவனத்தை ஈர்த்து அமர்கிறேன்.*

[2023 மார்ச் 29

முற்பகல் 11–20

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜெ. முகம்மது ஷாநவாஸ் அவர்கள்.

***திரு. ஜெ. முகம்மது ஷாநவாஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வலியவர்களைக் கண்டால் பம்முவதும், எளியவர்களிடம் பாய்வதும் சில காவல் அதிகாரிகளின் செயலாக இருக்கிறது. இதுவரையில் நடைபெற்ற காவல் நிலைய வதைகள் அனைத்தையும் எடுத்துப் பார்த்தால் எளிய மக்கள்தான் இலக்காகியிருக்கிறார்கள். எளிய மக்களின்மீதுதான் இப்படிப்பட்ட கொடூரமான தாக்குதல்கள் நடத்தப்படுகின்றன. இதை நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பலமுறை சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். இது நடக்கக் கூடாது என்றும் சொல்லியிருக்கிறார்கள். அதில் மிகவும் கண்டிப்புக் காட்டியிருக்கிறார்கள். அதன் பிறகும் இப்படிப்பட்ட செயல்கள் நடப்பது மிக, மிக வேதனையளிக்கிறது. இப்படி விசாரணைக்காக அழைத்துச் செல்லப்படும்போதே தண்டனை வழங்கக்கூடிய முறை, நீதிமன்றம் கொடுக்க வேண்டிய தண்டனையை காவல் நிலையத்தில் கொடுப்பது என்பது நீதி அமைப்பு முறையையே கேள்விக்குள்ளாக்குகிறது. அதுபோல, நீதிமன்றத்தில் மேஜிஸ்டிரேட் முன்பு ஆஜர்படுத்தப்படும்போது இவர்களுக்குக் காயம் இருக்கிறதா என்பதைப் பார்த்து உறுதி செய்து, அவர்கள் அதைக் கவனப்படுத்துவதில்லை. அதுவும் இத்தகைய சிக்கல்களுக்கு அடிப்படையாக இருக்கிறது. எனவே, இதற்கு என்ன தீர்வு என்றால், எந்த அதிகாரி இப்படிச் செய்தாலும் அது நம்முடைய ஒட்டுமொத்த ஆட்சிக்கும் களங்கத்தை ஏற்படுத்துவதாக அமைகிறது. எனவே, இந்த அதிகாரிகளைத் தண்டிக்க வேண்டும். அவர்களைப் பணி மாற்றம் செய்வது, அவர்களைக் காத்திருப்போர் பட்டியலில் வைப்பது என்பதெல்லாம் தீர்வு இல்லை. அவர்களைப் பணி நீக்கம் செய்து, கைது செய்ய வேண்டும். அப்போதுதான் இப்படிப்பட்ட குற்றச்செயல்கள் நடைபெறாமல் தடுக்க முடியும் என்று சொல்லி, விடுதலை சிறுத்தைகள் கட்சியின் சார்பில் அரசின் கவனத்தை ஈர்த்து அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.பி. நாகைமாலி அவர்கள்.

2023 மார்ச் 29]

திரு. வி.பி. நாகைமாலி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள அம்பாசமுத்திரம் சரக காவல் நிலையத்திற்கு வரும் விசாரணைக் கைதிகளை அந்த மாவட்ட உதவி காவல் கண்காணிப்பாளராக உள்ள திரு. பல்வீர் சிங் அவர்கள் கொடூரமாகத் தாக்கி, அவர்களுடைய பற்களைப் பிடுங்கியது என்பது ஒரு கொடிய, இதுவரை காவல் துறை செய்திராத ஓர் அக்கிரமமான செயலாக நாம் பார்க்கிறோம். நம்முடைய மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா அவர்கள் சொன்னதைப்போல, இவர் இளைஞர்; ஆரம்ப காலத்திலேயே இப்படி ஒரு மனிதாபிமானமற்ற. . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *போதும். அரசின் கவனத்தை ஈர்த்து அமருங்கள்.*

திரு. வி.பி. நாகைமாலி: *ஒரே ஒரு நிமிடம். ஆரம்ப காலத்திலேயே இவர் இப்படி மனிதாபிமானமற்ற செயல்களைச் செய்வாரேயானால், தொடர்ச்சியாக எப்படிப்பட்ட கொடூரமான செயல்களைச் செய்வார் என்பதை நாம் உணர வேண்டியிருக்கிறது. ஆகவே, அந்த* IPS *பதவியையே அவரிடமிருந்து பறித்து, அவரைக் கைது செய்து. . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *போதும்.*

திரு. வி.பி. நாகைமாலி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவரைக் கைது செய்து விசாரணைக்கு உட்படுத்த வேண்டுமென்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் இந்த அவையினுடைய கவனத்தை ஈர்த்து அமர்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன் அவர்கள்.*

திரு. தி. வேல்முருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குறிப்பாக ** அதிலும் குறிப்பாக, தென்காசி மாவட்டத்திற்கு ** ஏற்கெனவேகூட. . .*

** *மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அம்பாசமுத்திரம் A.S.P.-ஐப் பற்றி மட்டும் பேசுங்கள். மற்றதையெல்லாம் அவைக் குறிப்பிலிருந்து நீக்குகிறேன். நீங்கள் அதைப் பற்றி மட்டும் கருத்தைச் சொல்லுங்கள்.*

திரு. தி. வேல்முருகன்: *சரி. எதற்காக இதைச் சொல்கிறேன் என்றால், அவர்களுக்கு முறையான பயிற்சி அளித்து, அவர்கள் மனம் பக்குவப்பட்டு, பொதுமக்களை எப்படி அணுக வேண்டும், விசாரணைக் கைதிகளை எப்படி அணுக வேண்டும் என்பதைக் கருத்தில் கொண்டு அவர்கள் பணியாற்ற நமது அரசு உரிய அறிவுரைகளை வழங்க வேண்டும். (குறுக்கீடு) முடித்துவிடுகிறேன். இதில் இரண்டுவிதமான கருத்துகள் இருக்கின்றன. கஞ்சா, அபின், போதை மாத்திரைகள்; கல்லூரிகள், பள்ளிகளின் அருகே பல இடங்களில் விநியோகிக்கப்பட்டதாகவும், இவர் நேர்மையாகவும்,* IIT*-ல் படித்த* gold medalist *என்ற காரணத்தாலும், நேர்மையாக தன்னுடைய கோட்டத்தை வைத்துக்கொள்ள வேண்டுமென்பதற்காகத் தீவிரமாகப் பணியாற்றி இந்தத் தொழில்களில் ஈடுபட்டவர்களின்மீது கடுமையான நடவடிக்கை எடுத்ததன் காரணமாக, இதுபோன்ற பல்வேறு பிரச்சினைகள் அங்கே ஏற்பட்டதாகவும் சொல்லப்படுகிறது. ஆகவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இதைத் தீர விசாரித்து, விசாரணைக் கைதிகள்மீது இவரே தண்டனை கொடுப்பது. . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *உரையை முடியுங்கள்.*

திரு. தி. வேல்முருகன்: *முடித்துவிடுகிறேன். தண்டனை கொடுப்பது தவறு என்பதை உணர்த்துகின்ற வகையில் நடவடிக்கைகள் அமைய வேண்டும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்தை ஈர்த்து அமர்கிறேன். நன்றி.*

முற்பகல் 11–25

2. தகவல் கோரல்—*தொடர்ச்சி*

வியாசர்பாடி, அ.தி.மு.க. நிர்வாகி, திரு. இளங்கோவன் கொலை செய்யப்பட்டது—*தொடர்ச்சி*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*